[1987 நவம்பர் 16]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற வன விலங்குகள் சட்டத்தின் மூலமாக காடுகளில் திருடுவது மற்றும் அழிப்பதைத் தடுத்தல் மற்றும் வேறு சட்டங்களின் மூலமாக பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துபவர்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல், சமுதாய விரோதிகளைத் தடுத்தல், குண்டர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்தல் போன்றவற்றிற்கு வழிவகை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிமுக நிலையில் பேசுவது சுருக்கமாக இருக்க வேண்டும். விளக்கக் கூடாது. நடைமுறையில் இதற்கு எல்லா கட்சியினரும் ஒத்துழைப்பு தருகிறார்கள். ஆனால் விவாதத்தின்போது விரிவாகப் பேச அனுமதிக்கிறோம். தாங்கள் அப்போஸ் பண்ணுவதாக குறிப்பிட்டால் போதும். தாங்கள் அப்போஸ் பண்ணிவிட்டீர்கள் அதுபோதும்,

பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி. சி. ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப் படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1981-82 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே 1981–82 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கையை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1981–82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்தபோது, சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் மிகைச் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1981–82 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி